<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.55/2025 | Date | : 22.09.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : முனியப்பன் | Calling | : |
| Father Name | : மாணிக்கம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.09.2025.

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆலச்சம்பாளையத்தில் வசித்து கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 15-01-2025 ம் தேதி, நசியனூரில் உள்ள எனது பெரியம்மா காவேரி வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் சாமி கும்பிட்டுவிட்டு, எங்களது பிளாட்டினா இருசக்கர வாகனத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் எனது அப்பா மாணிக்கம் அமர்ந்துகொண்டு வந்தோம். அன்றைய தினம், மாலை சுமார் 06.00 மணியளவில் மூலப்பாதை குஞ்சாம்பாளையம் அருகே சாலையின் இடதுபுறமாக வந்துகொண்டிருந்தபோது, எடப்பாடியில் இருந்து எங்களுக்கு எதிர்திசையில் இருந்து வந்த டெம்போ ஒன்று அதற்கு முன்னால் வந்த காரை முந்திகொண்டு வலதுபுறமாக ஏறிவந்து எங்களது இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டது.

2) மோதியவுடன் சுமார் 10 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டோம். விபத்தில் நான் வண்டியுடன் கீழே விழுந்துவிட்டதால் எனக்கு அடி படவில்லை. எனது தந்தைக்கு தலையில் வெட்டு காயமும், கை மற்றும் கால்களில் பலத்த அடிப்பட்டிருந்தது. அவருக்கு வாயில் மட்டும் மூச்சு வந்துகொண்டிருந்தது, ஆனால் நினைவில்லை. பின்னர், அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தி டெம்போவின் ஓட்டுநர் ஆவார்.

3) என்னுடைய அப்பா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தேவூர் போலிசார் என்னிடம் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், சிகிச்சையில் இருந்த எனது தந்தை சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Muniyappan

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.55/2025 | Date | : 22.09.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : சச்சின் | Calling | : |
| Father Name | : மூர்த்தி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.09.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், ஆலச்சம்பாளையத்தில் வசித்து கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 15-01-2025 ம் தேதி, மாலை சுமார் 06.30 மணியளவில் நான் மூலப்பாதையில் பெட்ரோல் அடிப்பதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். பின்னர், திரும்பி வீட்டிற்கு வருவதற்காக மூலப்பாதையிலிருந்து ஆலச்சம்பாளையம் வருவதற்காக குஞ்சாம்பாளையம் சுடுகாடு அருகே வந்துகொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் முனியப்பனும், அவரது அப்பாவும் அவர்களது இருசக்கர வாகனத்தில் சாலையின் இடதுபுறமாக வந்துகொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன்.

2) அப்போது, எதிர் திசையில் கார் ஒன்று வந்துகொண்டிருந்தது. அதனை முந்தி சென்று வந்த பனைமரம் லோடுடன் கூடிய 407 டெம்போ ஒன்று வலதுபுறமாக ஏறிவந்து அந்த இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டது. முனியப்பன் இருசக்கர வாகனத்துடன் சென்று கீழே விழுந்துவிட்டார். மாணிக்கம் சுமார் 10 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டார். மாணிக்கத்திற்கு தலை, கை, தொடை ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டுவிட்டது. பின்னர், ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னோம். அடிப்பட்டவரை ஆம்புலன்ஸ்ல் ஏற்றும்போதே நிலமை மோசமாக இருந்ததால் சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்றேன்.

3) ஆஜர் எதிரி தான் அந்த டெம்போவின் ஓட்டுநர் ஆவார். டெம்போவின் ஓட்டுநர் வலதுபுறமாக ஏறி வேகமாக வந்ததே இந்த விபத்திற்கு காரணம் ஆகும். பின்னர், மாணிக்கம் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். அவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Sachin

Judicial Magistrate No.1,
Sankari.